C.P.5/2019
Witness : WW1 Thiru.Abdul Majeeth
Dated: 12.07.2019.

குறுக்கு விசாரணை முதல் எதிர்மனுதாரர் தரப்பு -

1ம் எதிர்மனுதாரர் நிறுவனம் தொழிலாளர்களுக்கு சம்பளம் மற்றும் இதர சலுகைகள் வழங்க முடியாமல் நலிவடைந்த நிலையில் 2008ம் ஆண்டு வரை இருந்தது எனக்கு தெரியும் என்றால் ஆமாம். 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமாக தேயிலை தொழிற்சாலை தற்போதுவரை செயல்பாட்டில் இல்லை என்றால் சரிதான். நான் ஆரம்பத்தில் ஐ.டி. நெ.76/2011 ல் 1ம் எதிர்மனுதாரர் மீது மட்டும் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். பிறகு அந்த வழக்கில் 2ம் எதிர்மனுதாரையும் கட்சிக்காரராக சேர்த்தேன் என்றால் ஆமாம். நான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 2ம் எதிர்மனுதாரர்தான் எனக்கு பரிகாரம் வழங்கவேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர்களுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி 1ம் எதிர்மனுதாரர் எஸ்டேட் 2009ம் ஆண்டு முதல் 2ம் எதிர்மனுதாரரின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வேலை நீக்கத்திற்கு முன்பு நான் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் கீழ் வேலை செய்து 2ம் எதிர்மனுதாரரிடம்தான் சம்பளம் வாங்கினேன் என்றால் அமாம். 2ம் எதிர்மனுதாரருக்கும் எனக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாகத்தான் என்னை வேலை நீக்கம் செய்தார்கள் என்றால் ஆமாம். வேலை நீக்க உத்தரவு மட்டும்தான் 1ம் எதிர்மனுதாரரால் வழங்கப்பட்டது என்றால் ஆமாம். தற்போதும் 2ம் எதிர்மனுதாரரின் கட்டுப்பாட்டில்தான் 1ம் எதிர்மனுதாரர் எஸ்டேட் உள்ளது என்றால் ஆமாம். 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் 2009ம் ஆண்டு முதல் தொழிலாளர்களுக்கு சம்பளமும், சலுகைகளும், வழங்குகிறது என்றால் ஆமாம். ................. ....... .............................. .....



2ம் எதிர்மனுதாரரின் அதிகாரிகள் தான் தொழிலாளர்களை மேற்பார்வை செய்கிறார்கள் என்றால் ஆமாம். 1ம் எதிர்மனுதாரரின் அதிகாரிகள் தொழிலாளர்களுக்கு பணி வழங்குவது உள்ளிட்ட அதிகாரமும் 2009ம் ஆண்டிற்கு பிறகு செய்யவில்லை என்றால் சரிதான். 2009ம் ஆண்டிற்கு பிறகு 1ம் எதிர்மனுதாரரின் அதிகாரிகள் யாரும் எஸ்டேட் அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்றால் ஆமாம். 2009 ஆண்டு வரை பணி ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு பணிக்கொடை 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் வழங்கியது என்றும் 2009க்கு பணி ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்குள்ள பணிக்கொடை, சம்பளம் 2009 வரையிலான காலத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் 2009க் கு பிறகு உள்ள காலத்திற்கு 2ம் எதிர்மனுதாரரும் வழங்கினார்கள் என்றால் ஆமாம். 2009ம் ஆண்டிற்கு பிறகு தொழிலாளர்களுக்கு வேலை சம்பளம் வழங்குவதற்கு 2ம் எதிர்மனுதாரருக்குத்தான் அதிகாரம் உள்ளது என்பதால்தான் அவரை கட்சி சேர்த்துள்ளேன் என்றால் ஆமாம். 1ம் எதிர்மனுதாரர் கட்டுப்பாட்டில் தற்போது நிர்வாகமோ, வியாபாரமோ இல்லை என்றால் சரிதான். தொழிற்தாவாவில் பிறப்பிக்கப்பட்ட தீர்வம் மீது 1ம் எதிர்மனுதாரர் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளது எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேல் முறையீடு நிலுவையில் உள்ளதால் 1ம்

எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. குத்தகை ஒப்பந்தப்படி 2ம் எதிர்மனுதாரர்தான் நீதிமன்ற ஒப்பந்தப்படி எனக்கு பரிகாரம் வழங்கவேண்டும் என்றால் தவறு 1ம் எதிர்மனுதாரர்தான் வேலை நீக்க உத்தரவு கையொப்பம் போட்டுள்ளார். முதல் விசாரணை பத்தி 5ல் நான் 31.12.2018 வரை 2ம் எதிர்மனுதாரர்தான் ஊதியம் உள்ளிட்ட பணப்பயன்களை வழங்கவேண்டும் என்று ...........................................................................................

Page /8/

கேட்டுள்ளேன் என்றால் ஆமாம். தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கம் மற்றும் தென்னிந்திய தோட்ட உத்தியோகஸ்தர்கள் சங்கம் இணைந்து ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்கள் நான் இந்த வாக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தொழிற்தாவா எண்.76/2011 வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். 2008ம் ஆண்டு நான் 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின்கீழ் பணிபுரிந்தபோது இறுதியாக பெற்ற மாத ஊதியம் ரூ.8634/- என்றால் ஆமாம். 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் நான் பணிபுரிந்து வேலை நீக்கம் செய்யப்பட்டபோது கடைசியாக வாங்கிய மாத சம்பளம் ரூ.13132/- என்றால் ஆமாம். நான் மனுவில் பின்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள பிக்சட் ஓடி. என்பது தொழிலாளி வேலை நேரம் முடிந்து ஓவர் டைம் வேலை பார்த்தால் கிடைக்கும் பணப்பலன் என்றால் இல்லை அது தொழிலாளி வேலைக்கு ஆஜராகி கையொப்பம் செய்தாலே சம்பளத்தின் ஒரு பகுதியாக வழங்கப்படும் தொகையாகும். நான் மனுவில் கூறியுள்ள பிக்சட் ஓவரடைம் பயனப்பு, கேஸ் சலுகை, டீ பவுடர் அலவன்ஸ் மின்சார சலுகை கம்பளி குடை, மருந்து செலவு ஆகியவற்றை கோருவதற்கு ஐ.டி. வழக்கு உத்தரவுப்படி எனக்கு உரிமை இல்லை என்றால் உரிமை உள்ளது. நான் கணக்கீடு செய்துள்ள சம்பளத்தொகை எந்த அடிப்படையும் இல்லாதது என்றும் ஆகவே, இந்த மனுவில் கோரியுள்ள தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

/ Page /9/

நான் கோரியுள்ள தொகை அதிகமானது என்றும் மேல்முறையீடு நிலுவையில் உள்ளதால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரர் மீது எந்த பரிகாரமும் கேட்காததால் 1ம் எதிர்மனுதாரர் பொருத்து மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

( 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது )